## 6-ஆம் திருமுறை பதிகம் 5 (6.5.1 - 6.5.10)

பண் : திருத்தாண்டகம்
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்
திருவதிகை வீரட்டானம் போற்றித் திருத்தாண்டகம்

சுவாமி பெயர் : வீரட்டேசுவரர்
தேவி: திரிபுரசுந்தரி

(பாடல் தொறும் போற்றி! போற்றி! என இறைவனை நினைந்துவணங்குவதாக அமைந்திருத்தலின் இது போற்றித் 'திருத்தாண்டகம்' எனப் பெயர் பெற்றது.)

6287.
எல்லாஞ் சிவனென்ன நின்றாய் போற்றி
யெரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி
கொல்லுங் கூற்றோன்றை யுதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி
கற்றா ரிடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியனரண மெய்தாய் போற்றி
வீரட்டங் காதல் விமலா போற்றி.

(பொ - ரை) எல்லாப் பொருள்களும் சிவமே என்று சொல்லு மாறு அவற்றில் கலந்து நிற்பவனே! வணக்கம். விளங்குகின்ற ஒளிப்பிழம்பாய் நிற்கும் இறைவனே! வணக்கம். கொல்லுதல் தன்மை பொருந்திய மழு, வாள் ஆகிய படைகளை யுடையவனே! வணக்கம். கொல்லுதற்கு வந்த இயமனாகிய ஒருவனை உதைத்தவனே! வணக்கம். திருவருள் ஞானத்தைப் பெறாதவர் தம் அறிவால் காண இயலாதவனே! வணக்கம். இறைவனின் அடிசேர் ஞானத்தைக் கற்றவர்களுக்கு ஏற்படும் துன்பங்களை நீக்குபவனே! வணக்கம். விற்படையால் பகைவரின் மதிலையழித்தவனே! வணக்கம். திருவீரட்டானத்தில்மிகவும் விரும்பி உறையும் மலமாசற்றவனே!வணக்கம் என்பதாம்.

(கு-ரை) கொல்+ஆர்=கொல்லுதல் தன்மை பொருந்திய கூற்று என்பது. பொருளால் உயர்திணையாயினும் சொல்லால் அஃறிணையாய் நிற்றலின் 'ஒன்று' என அவ்வாய்பாட்டால் கூறினார். கற்றார், கல்லாதார் என்பன நூலறிவை நோக்காது மெய்யுணர்வை நோக்கி நின்றன. 1

6288.
பாட்டுக்கும் ஆட்டுக்கும் பண்பா போற்றி
பல்லூழி யாய படைத்தாய் போற்றி
ஓட்டகத்தே யூணா வுகந்தாய் போற்றி
யுள்குவா ருள்ளத் துறைவாய் போற்றி
காட்டகத்தே யாடல் மகிழ்ந்தாய் போற்றி
கார்மேக மன்ன மிடற்றாய் போற்றி
ஆட்டுவதோர் நாக மசைத்தாய் போற்றி

யலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி.

(பொ-ரை) பாடுதற்கும் ஆடுதற்கும் வல்லவனே! வணக்கம்.
பல ஊழிக்காலமாக உலகைப் படைத்து நிற்பவனே! வணக்கம்.
ஓட்டின்கண் உணவுண்பதற்கு மகிழ்பவனே! வணக்கம். அன்பால்
நினைவார்தம் உள்ளத்து உறைபவனே! வணக்கம். நன்காட்டின்கண்
மகிழ்ந்து நடனம் செய்பவனே! வணக்கம். கரிய மேகத்தை
யொத்த கழுத்தை யுடையவனே! வணக்கம். ஆடுதற்குரிய பாம்பை
இடுப்பில் அணிந்திருப்பவனே! வணக்கம். அலையெறியும் கெடில
நதி சூழ்ந்த திருவதிகை திருவீரட்டானத்தை ஆளுபவனே!
வணக்கம் என்பதாம்.

(கு-ரை) பண்பன் என்றது அத்தொழிற்கு வல்லனாதலைக்
குறித்தது. காடு - இடுகாடு. 2.

6289.
முல்லையங் கண்ணி முடியாய் போற்றி
முழுநீறு பூசிய மூர்த்தி போற்றி
எல்லை நிறைந்த குணத்தாய் போற்றி
யேழ்நரம்பி னோசை படைத்தாய் போற்றி
சில்லைச் சிரைத்தலையி லூணா போற்றி
சென்றடைந்தார் தீவினைக டீர்ப்பாய் போற்றி
தில்லைச் சிற்றம்பல மேயாய் போற்றி
திருவீரட் டானத்தெஞ் செல்வா போற்றி.

(பொ-ரை) முல்லை மலராலாய மாலையை முடியில் அணிந்
திருப்பவனே! வணக்கம். குணங்களின் மேல் எல்லையாய் நிற்
பவனே! வணக்கம். ஏழிசையாய் நிறைந்தவனே! வணக்கம்.
வட்டமான மழிக்கப்பட்ட மண்டையோட்டில் உண்பவனே!
வணக்கம். தன்னையடைந்தவர்களின் தீவினைகளை நீக்குபவனே
வணக்கம். தில்லைச் சிற்றம்பலத்தில் வீற்றிருப்பவனே! வணக்கம்.
திருவீரட்டானத்தின்கண் உள்ள எம்முடைய முத்திச் செல்வத்தனே!
வணக்கம் என்பதாம்.

(கு-ரை) நானிலத்தவரும் இறைவனை வணங்குதற்குரியரே.
அந்நிலையில் முல்லை நிலத்தார் செய்யும் வழிபாட்டினை
ஏற்றலின் 'முல்லையங்கண்ணி முடியாய் போற்றி' என்றார்.
சில்லை - வட்டம். சிரை - மழிப்பு. 3

6290.
சாம்ப ரகலத் தணிந்தாய் போற்றி
தவநெறிகள் சாதித்து நின்றாய் போற்றி
கூம்பித் தொழுவார்தங் குற்றே வலைக்
குறிக்கொண் டிருக்கும் குழகா போற்றி
பாம்பு மதியும் புனலும் தம்மிற்
பகைதீர்த் துடன்வைத்த பண்பா போற்றி
ஆம்பன் மலர்கொண் டணிந்தாய் போற்றி
யலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி.

(பொ-ரை) திருநீற்றை மார்பிலணிந்தவனே! வணாக்கம்.
சரியை முதலிய தவ நெறியினை மேற்கொண்டொழுகுவார்க்கு
அவ்வந் நெறிகளை முற்றுவிப்பவனே! வணக்கம். மனம் ஒன்றி
வழிபடுபவர் தம் பணிகளை இனிது நிறைவேற்றுதற்குத் துணை
புரிபவனே! வணக்கம். பாம்பு, பிறை, கங்கை ஆகிய மூன்றும்
ஒன்று மற்றொன்றைப் பகைக்காதவாறு அவற்றை ஒருங்கு வைத்
திருப்பவனே! வணக்கம். ஆம்பல் மலரணிந்தவனே! வணக்கம்.
அலையெறியும் திருக் கெடிலநதிக் கரையின்கண்ணுள்ள
திருவதிகை வீரட்டானத்தை ஆள்பவனே! வணக்கம் என்பதாம்.

(கு-ரை) சாம்பர் - திருநீறு. சாம்பல் சாம்பர் என நின்றது.
தன்னை அன்பால் விரும்பித் தொழுவார்க்கு ஏவலும் புரிவான்
இறைவன். வந்திக்குக் கூலியாய் வந்து மண் சுமந்து கூலி
கொண்டு, அக்கோவால் மொத்துண்டதும் பாணபத்திரன்
பொருட்டுக் கடிய கானகம் சென்றும் கட்டிய விறகை
முடியிலேற்றிச் சுமந்தும் நின்ற அருள் நிகழ்ச்சிகளைக் காண்க.4

6291.
நீறேறு நீல மிடற்றாய் போற்றி
நிழறிகழும் வெண்மழுவாள் வைத்தாய் போற்றி
கூறே றுமையொருபாற் கொண்டாய் போற்றி
கோளரவ மாட்டுங் குழகா போற்றி
ஆறேறு சென்னி யுடையாய் போற்றி
யடியவர்கட் காரமுத மானாய் போற்றி
ஏறேற வென்று முகப்பாய் போற்றி
யிருங்கெடில வீரட்டத் தெந்தாய் போற்றி.

(பொ-ரை) திருநீறணிந்த கரிய கழுத்தினை உடையவனே!
வணக்கம். ஒளிபொருந்திய வெள்ளிய மழுவையும் வாளையும்
கையில் வைத்திருப்பவனே! வணக்கம். திருமேனியில் ஒரு கூறாக
உமையம்மையை இடமருங்கில் கொண்டவனே! வணக்கம்.
கொடுமை பொருந்திய பாம்பினையுடையவனே!வணக்கம்.
கங்கை பொருந்திய சடையையுடையவனே! வணக்கம்.
அடியவர்கட்குப் பொருந்திய சாவாதமருந்தாய் நிற்பவனே! வணக்கம்.
ஆனேற்றில் ஊர்ந்து வருவதற்கு விரும்புபவனே! வணக்கம்.
பெரிய கெடில நதிக்கரையின்கண் இருக்கும் திருவதிகை
வீரட்டானத்திலுள்ள எம் தந்தையே! வணக்கம் என்பதாம்.

(கு-ரை) நிழல் - ஒளி. கூறுஏறு - கூறாய் அமைந்த. 5

6292.
பாடுவார் பாட லுகப்பாய் போற்றி
பழையாற்றுப் பட்டீச் சுரத்தாய் போற்றி
வீடுவார் வீடருள வல்லாய் போற்றி
வேழத் துரிவெருவப் போர்த்தாய் போற்றி
நாடுவார் நாடற் கரியாய் போற்றி
நாக மரைக்கசைத்த நம்பா போற்றி
ஆடுமா னஞ்சு முகப்பாய் போற்றி
யலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி.

(பொ-ரை) அன்பு ததும்பப் பாடுவார் தம் பாடலை விரும்பிக் கேட்பவனே! வணக்கம். பழையாறு, பட்டீச்சுரம் ஆகிய இடங்களில் எழுந்தருளியிருப்பவனே! வணக்கம். பற்றுக்களை விட்டார்க்கு வீடு பேற்றை யருள வல்லவனே! வணக்கம். தம் முனைப்பால் காண நினைப்பார்க்கு அரியவனே! வணக்கம்.பாம்பினை இடையில் அணிந்திருப்பவனே! வணக்கம். திருமுழுக்கு ஆட்டுதற்குரிய பசுவினிடமாகத் தோன்றும்ஐம்பொருள்களையும் ஏற்று மகிழ்பவனே! வணக்கம்.
அலையெறியும் கெடில நதிக்கரையின்கண்ணுள்ள திருவதிகை வீரட்டானத்தை இடமாகக் கொண்டிருப்பவனே! வணக்கம் என்பதாம்.

(கு-ரை) பழையாறு, பட்டீச்சுரம் என்பன கும்பகோணத்திற்கு அருகில் உள்ளவை. பழைமை வாய்ந்தவை. ஆன் ஐந்து:- பால், தயிர், நெய், வெண்ணெய், மோர் என்பன. பின்னைய இரண்டிற்கும் வேறாக ஆன்நீர், சாணம் ஆகியவற்றைக் கொள்வாரும் உண்டு.6

6293.
மண்டுளங்க வாடன் மகிழ்ந்தாய் போற்றி
மால்கடலு மால்விசும்பு மானாய் போற்றி
விண்டுளங்க மும்மதிலு மெய்தாய் போற்றி
வேழத் துரிமூடும் விகிர்தா போற்றி
பண்டுளங்கப் பாடல் பயின்றாய் போற்றி
பார்முழுது மாய பரமா போற்றி
கண்டுளங்கக் காமனைமுன் காய்ந்தாய் போற்றி
கார்க்கெடிலங் கொண்ட கபாலீ போற்றி.

(பொ-ரை) நிலம் அதிருமாறு மகிழ்ந்து ஆடுபவனே! வணக்கம். பெரிய கடலும் இருவிசும்பும் ஆனவனே! வணக்கம். விண் அதிர மூன்று மதில்களையும் அழித்தவனே! வணக்கம்.யானைத் தோலைப் போர்த்திருப்பதன் வாயிலாக உலகியலினின்றும் வேறுபட்டவனே! வணக்கம். பண்ணமைதி கெடாதவாறு பாடுகின்றவனே! வணக்கம். உலகமே உருவாக விளங்குபவனே! வணக்கம். திருக்கண்ணின் ஒளி விளக்கத்தால் மன்மதனை அழித்தவனே! வணக்கம். நீர் நிறைந்திருக்கும் கெடில நதிக் கரையின்கண் அமர்ந்து கபாலத்தைக் கையில் கொண்டவனே! வணக்கம் என்பதாம்.

(கு-ரை) கார் - நீரின் மேற்று. 7

6294.
வெஞ்சினவெள் ளேறூர்தி யுடையாய் போற்றி
விரிசடைமேல் வெள்ளம் படைத்தாய் போற்றி
துஞ்சாப் பலிதேருந் தோன்றால் போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
நஞ்சொடுங்குங் கண்டத்து நாதா போற்றி
நான்மறையோ டாறங்க மானாய் போற்றி
அஞ்சொலாள் பாக மமர்ந்தாய் போற்றி
யலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி.

(பொ-ரை) கொடிய சினம் மிக்க வெண்மையான ஆனேற்றை ஊர்தியாக உடையவனே! வணக்கம். விரிந்த சடைமேல் கங்கையை யுடையவனே! வணக்கம். என்றும் நிறைக்க இயலாத பிச்சையை--யேற்கும் பெரியவனே! வணக்கம். வணங்குவாரின் துன்பத்தை உடனே நீக்குபவனே! வணக்கம். நஞ்சினைக் கழுத்தில் அடக்கிய தலைவனே! வணக்கம். நான்கு வேதங்களும் ஆறு அங்கங்களும் ஆனவனே! வணக்கம். அழகிய சொற்களை யருளும் உமையம்மையை ஒரு கூற்றில் உடையவனே! வணக்கம். அலையெறியும் திருக்கெடில நதிக்கரைக்கண் அமைந்த திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளி யிருப்பவனே! வணக்கம் என்பதாம்.

(கு-ரை) தொழுத கை - தொழுத பொழுதே. 8

6295.
சிந்தையாய் நின்ற சிவனே போற்றி
சீபர்ப் பதஞ்சிந்தை செய்தாய் போற்றி
புந்தியாய்ப் புண்டரிகத் துள்ளாய் போற்றி
புண்ணியனே போற்றி புனிதா போற்றி
சந்தியாய் நின்ற சதுரா போற்றி
தத்துவனே போற்றியென் றாதாய் போற்றி
அந்தியாய் நின்ற வரனே போற்றி
யலைகெடில வீரட்டத் தாள்வாய் போற்றி.

(பொ-ரை) சிந்திக்கப்படும் பொருளாயுள்ள சிவபெருமானெ! வணக்கம். சீசைலத்தில் உறைபவனே! வணக்கம். புத்தியால் தெளிபவர் தம் மனத்தாமரையுள் வீற்றிருப்பவனே! வணக்கம். அறவடிவினனே! வணக்கம். தூய்மையானவனே! வணக்கம். காலை நண்பகல் மாலை என்னும் முப்பொழுதுகளில் காலை நண்பகல் ஆகிய பொழுதுகளில் வணங்கி வழிபடுவார்க்கு அருளும் வல்லமை யுடையவனே! வணக்கம். உண்மைப் பொருளாய் நிற்பவனே! வணக்கம். என் தந்தையே! வணக்கம். மாலைப்பொழுதில் வழிபடுவார்க்கு உரிய பரம்பொருளாய் நிற்பவனே! வணக்கம். அலையெறியும் கெடில நதிக் கரையிலிருக்கும் திருவதிகை வீரட்டானத்தை ஆளுகின்றவனே! வணக்கம் என்பதாம்.

(கு-ரை) மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும் உட்கருவிகளாம். அவற்றுள் சித்தம் சிந்திக்கும், புத்தி தெளியும். சந்தி - பொழுது; காலை நண்பகல் மாலை என்பன இவற்றுள் அந்தியைப்(மாலையை) பின் விதத்தலின் சந்தி என்றது காலையும் நண்பகலுமாகிய அவ்விரண்டேயாம். சீபர்ப்பதம் - சீசைலம். இறைவி காலையில் படைப்பாளாயும் (பிராமி), நண்பகலில் காப்பவளாயும் (வைணவி), மாலையில் அழிப்பவளாயும் (இரௌத்திரி) நிற்பள் என்றும், இறைவனும் அப்பெருமாட்டியுடன் உடனாய் நிற்பன் என்றும், அவ்வேளைகளில் வழிபாடாற்றுவோர்க்கு அகமகிழ்ந்து அருளுவன் என்றும் கூறுப. 9

6296.
முக்கணா போற்றி முதல்வா போற்றி
முருகவே டன்னைப் பயந்தாய் போற்றி

தக்கணா போற்றி தருமா போற்றி
தத்துவனே போற்றியென் றாதாய் போற்றி
தொக்கணா வென்றிருவர் தோள்கை கூப்பத்
துளங்கா தெரிசுடராய் நின்றாய் போற்றி
எக்கண்ணுங் கண்ணிலே னெந்தாய் போற்றி
யெறிகெடில வீரட்டத் தீசா போற்றி.

(பொ-ரை) மூன்று கண்களையுடையவனே! வணக்கம். முதன்மையானவனே! வணக்கம். முருகவேளைத் தோற்றுவித்தவனே! வணக்கம். தென்னாடுடைய சிவனே! வணக்கம். அறவடிவினனே! வணக்கம். உண்மைப் பொருளாய் நிற்பவனே! வணக்கம். என் தந்தையே! வணக்கம். மாலும் பிரமனும் கூடித் தமக்குச் சிவபெருமானே தலைவன் எனக் கைகூப்பி வணங்க, அசையாத பொருளாய் நின்றருளுபவனே! வணக்கம். எவ்விடத்தும் நின்னை யன்றிப் பற்றுக் கொண்டில்லாதவனாகிய எனக்குத் தந்தையாய் நின்றருளுபவனே! வணக்கம். அலையெறியும் கெடிலநதிக் கரைக் கண்ணுள்ள திருவதிகை வீரட்டானத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனே! வணக்கம் என்பதாம்.

(கு-ரை) 'முருகவேள் தன்னைப் பயந்தாய்' என்றது இறைவன் தன் ஐந்து முகத்தோடு அதோமுகமும் கொண்டு, செங்தழற்கண்ணா றாலும் ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்து, அவற்றால் முருகப் பெருமானைத்தோற்றியருளியது பற்றியாம். தெக்ஷணம் என்பது தெக்கணம் என்றாகிப் பின் அது தக்கணம் என்றாயிற்று.'இருவர் தொக்கு அண்ணா என்றுதோள் கைகூப்ப' எனக்கூட்டுக. அரை: தொகுத்தல் விகாரம். எக்கண்ணும் - எவ்விடத்தும். 10